# <u>பொன்னேரி நகராட்சி</u>
# <u>நகர்மன்ற சாதாரணக்கூட்டம்</u>

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத்தலைவர் திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் அவர்களின் தலைமையில் **2023** ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் **28.02.2023** செவ்வாய்க்கிழமை முற்பகல் **11.00** மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் **.**

**<u>பொருள் எண் 1</u>**

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் ஜனவரி **2023** மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:- மன்றம் அனுமதி அளிக்கலாம்

நகர்மன்ற தீர்மாண எண்:178 நாள்: **28.02.2023**

**தீர்மானம்:: பதிவு செய்யப்படுகிறது .**

**<u>பொருள் எண் 2</u>**

பொன்னேரி நகராட்சி பகுதிக்குட்பட்ட **19**வது வார்டு ஆண்டவர் தெரு பகுதியில் குடிநீர் டெலிவரி பைப்லைன் பஸ்ட் ஏற்பட்டதை தொடர்ந்து அப்பகுதிக்கு குடிநீர் வழங்குவதில் சிரமம் எற்படுகிறது. மேலும் பைப்லைன் பஸ்ட் பழுது நீக்கம் செய்ய முற்படும்போது அருகிலுள்ள பகுதிகளிலிருந்து மண் சரிந்து விழுவதால் பைப்லைன் பஸ்ட் சரிசெய்ய இயலாத சூழ்நிலை ஏற்பட்டதால் அப்பகுதியில் புதியதாக பைப்லைன் அமைக்கும் பணியினை மேற்கொள்ளப்பட்டது. மேலும் **18**வது வார்டு , தாலுக்கா அலுவலக சாலை பகுதியில் பாதாள சாக்கடை நடைபெற்று முடிந்த நிலையில் அப்பகுதியில் உள்ள பழைய குடிநீர் பைப்லைன் மழைநீர் வடிகாலுக்கு கீழ்பகுதியில் உள்ளதால் அதில் கழிவுநீர் கலந்து வருவதாக தொடர்ந்து புகார் வரப்பெற்றதை தொடர்ந்து மேற்படி பகுதியிலும், புதியதாக பைப்லைன் அமைக்கும் பணியினை மேற்கொள்ளப்பட்டது.மேற்கண்ட இரண்டு பைப்லைன் அமைக்கும் பணிகளுக்கும், தோராய செலவினம் ரூ.**2.00**/- இலட்சத்திற்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
**(** ந.க.எண் **114/2023** / அ**1)**

நகர்மன்ற தீர்மாண எண்: 179 நாள்: **28.02.2023**

**தீர்மானம்:: மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.**

**<u>பொருள் எண் 3</u>**

பொன்னேரி நகராட்சியில் PMSWANITHI திட்டத்தின்கீழ் **221** சாலையோர வியாபாரிகள் பயன்பெற்று வருகின்றனர். மேலும் மேற்படி சாலையோர வியாபாரிகளுக்கு இந்நகராட்சி மூலம் வங்கிகளில் கடனுதவியும், பெற்றுத்தரப்படுகிறது. தற்போது **221** சாலையோர வியாபாரிகள் பயன்பெறும் விதமாக Day-Nulm திட்டதின்கீழ் பொன்னேரி நகராட்சி சாலையோர வியாபாரிகள் **100** நபர்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின்

செயலாணைகள் ந.க.எண் 20789/2021/UPA-2நாள் 15.11.2022ன்படி SUSV வண்டிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் முதற்கட்டமாக 20 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி SUSV வண்டிகள் அனைத்தும் சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளதால் அதனை சென்னை மாநகராட்சியிலிருந்து கொண்டுவர வாகனங்கள் தேவைப்படுவதால் மேற்படி வாகனங்களை வாடகைக்கு வைத்துக்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.40000/-க்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண்1183/2022 /அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 180 நாள்: 28.02.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது.**

**பொருள் எண் 4**

பொன்னேரி நகராட்சியில் டெங்கு ஒழிப்பு DBC பணியாளர்களின் ஒப்பந்தம் ( Green Service Trust ) 31.01.2023 உடன் முடிவடைவதால் இந்நகராட்சியில் டெங்கு காய்ச்சல் தொடர்ச்சியாக வந்த வண்ணம் உள்ளதால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்காக DBC பணியாளர்களை சப்ளை செய்யவும், Green Service Trust நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை 31.03.2023 வரை நீட்டிப்பு செய்ய நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற மன்றப்பொருள் வரைவு ஒப்புதலுக்கு .

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் 341/2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 181 நாள்: 28.02.2023

**தீர்மானம்:: ஒப்புதல் அளிக்கப்படுகிறது .**

**பொருள் எண் 5**

பொன்னேரி நகராட்சியில் வரிவசூல் உள்ளிட்ட அனைத்து துறை பணிகளும், UTIS மென்பொருள் மூலம் நடைபெறுவதால் கணினியில் பதிவேற்றம் செய்வதற்கு 8 எண்ணிகையிலான கணினிகளை அனைத்து பிரிவு அலுவலர்களும் பயன்படுத்துகின்றனர், மேற்படி கணினிகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிபார்க்கும் பணியினை மேற்கொள்ளவும், கணினி உதிரிபொருட்களை வாங்கி பொருத்தவும், பிரிண்டர்களின் டோனர்களை ரீபில் செய்யவும், வருடாந்திர பராமரிப்பு ( AMC ) மூலம் மேற்கொள்ளவும், பொறியில் பிரிவில் சாலைப்பதிவேடு Cad Drawing ,மற்றும் திட்டப்பணிகளுக்கான Cad Drawing தயார் செய்ய இவ்வலுவலகத்தில் பணியாளர்கள் இல்லாததால் விலைப்புள்ளிகள் பெற்று மேற்படி பணிகளை நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளம், அதற்கான தோராய செலவினம் ரூ.1,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் 312 /2022 /அ1

நகர்மன்ற தீர்மாண எண்: 182 நாள்: 28.02.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது.**

**பொருள் எண் 6**

பொன்னேரி நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளின் விவரத்தினை தினத்தந்தி நாளிதழில் 15.01.2023 அன்று விளம்பரம் செய்தமைக்கு பட்டியல் ரூ.15120/- வரப்பெற்றுள்ளதை தினத்தந்தி நிறுவனத்திற்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று வழங்கியமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் 55 /2023/அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 183 நாள்: 28.02.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது.**

## பொருள் எண் 7

பொன்னேரி நகராட்சியில் கள்ளுக்கடைமேடு பகுதியில் புதியதாக கட்டப்பட்டுவரும் நவீன எரிவாயு தகனமேடை கட்டிடத்திற்கு புதிதாக மின் இணைப்பு பெற மின்சார வாரியத்திடமிருந்து ரூ.38500 /- க்கு கேட்பு வரப்பெற்றுள்ளது. மேலும் நீலிஅப்பாதுரை தெருவில் இயங்கிவரும் மின்மோட்டாரின் மின் இணைப்பினை இடம் மாற்றி அமைத்திட மின்சார வாரியத்திடமிருந்து ரூ.2474 கேட்பு வரப்பெற்றுள்ளது. மேற்படி இரண்டு கேட்புகளையும் மின்சார வாரியத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் 262/2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 184 நாள்: 28.02.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது.**

## பொருள் எண் 8

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி நகராட்சியில் திரு. எஸ்.சிவசங்கரமூர்த்தி, எஸ்சேகர், எஸ்.சிவராமன் ஆகியோருக்கு சொந்தமான சர்வே எண் 61/2A2, 2B2, 65/14B1A1, 16A, 18ல் 4.97 ஏக்கர் பரப்பில் உள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் , திருவள்ளூர் மண்டலம் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி மனைப்பிரிவில் உள்ள மொத்த சாலைகள் 5806.50 ச.மீ, பூங்கா 1444 ச.மீ ஆகியவற்றை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது . மேலும் மேற்படி மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் பெறுவதற்கு செலுத்தப்படவேண்டிய கட்டணங்களை செலுத்தப்பட்டுள்ளதால் மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கிட மன்றத்தின் ஒப்புல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். **416** /2022 அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 185 நாள்: **28.02.2023**

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது.**

**பொருள் எண் 9**

இந்நகராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் . **492** நாள் **19.09.2013** மற்றும் அரசாணை எண் **500** நாள் **29.12.2016** ன்படி திட்ட மான்ய நிதியாக ரூ.**50.97** கோடி மற்றும் கடன் தொகையாக ரூ.**3.81** கோடி என அனுமதிக்கப்பட்டு மொத்தம் ரூ.**54.78** கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் பணி நடைபெற்று வருகிறது.

மேலும் பாதாள சாக்கடை திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்திட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்திட முதலில் கரிகிருஷ்ண பெருமாள் கோயில் தெரு அருகே இடம் தேர்வு செய்யப்பட்டது. மேற்படி இடமானது இந்து அறநிலையத்துறைக்கு சொந்தமான இடம் என்பதால் அந்த இடத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க இயலவில்லை.

அதனை தொடர்ந்து மாற்று இடமாக செய்ய சின்னக்காவணம் பகுதி சர்வே எண் 55/2ல் இடம் தேர்வு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியரின் முன் நுழைவு அனுமதி பெற்று கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் இடத்தினை மாற்றி தேர்வு செய்யப்பட்டதால் பாதாள சாக்கடை பணிகள் நடைபெறும் இடத்திலிருந்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு ஆரணி ஆற்றின் குறுக்கே பைப்லைன் அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதால் அதற்கு கூடுதலாக ரூ.**190.00** இலட்சம் செலவு ஏற்படுவதை தெரிவித்து அதற்கு உரிய அனுமதி வழங்கிடக்கோரி உதவி செயற்பொறியாளர், குடிநீர் வடிகால் வாரியம் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேற்படி கூடுதல் செலவினம் ( Price Escalation) தொடர்பாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று கடிதம் அனுப்பியமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் **511** /2021 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 186 நாள்: **28.02.2023**

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது.**

**பொருள் 10**

இந்நகராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் . 492 நாள் 19.09.2013 மற்றும் அரசாணை எண் 500 நாள் 29.12.2016 ன்படி திட்ட மான்ய நிதியாக ரூ.50.97 கோடி மற்றும் கடன் தொகையாக ரூ.3.81 கோடி என அனுமதிக்கப்பட்டு மொத்தம் ரூ.54.78 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் பணி நடைபெற்று வருகிறது.

மேலும் பாதாள சாக்கடை திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்திட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்திட பெரியகாவணம் பகுதியில் உள்ள சர்வே எண் 55/2ல் புன்செய் அனாதீனம் வகைப்பாடு கொண்ட இடத்தில் 1.50 ஏக்கர் நிலத்தினை பொன்னேரி நகராட்சிக்கு நிலமாற்றம் செய்திட கருத்துரு அனுப்பப்பட்டதை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் , திருவள்ளூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 20437/2019/அ3 நாள் 04.1.2021ன் மூலம் பொன்னேரி நகராட்சிக்கு முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர் , திருவள்ளூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 20437/2019/அ3 நாள் 01.05.2022 மூலம் நகராட்சிக்கு மேற்படி நிலம் நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி இடத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் பணி ஆரம்பிக்கப்பட்டு தற்போது 22.35% சதவிகிதம் பணிகளே நடைபெற்றுள்ளது.

மேற்படி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி நில உரிமை மாற்றம் பெற காலதாமதம் ஆனதால் தாமதமாக பணி துவங்கப்பட்டது. 09.04.2018 ல் பணி உத்திரவு வழங்கப்பட்ட நிலையில் தற்போது கழிவுநிர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருவதால் தற்போதைய சூழலில் கூடுதல் செலவினத்தொகை ரூ.1,47,54,185 /- க்கு அனுமதி வழங்க வேண்டி நிர்வாகப்பொறியாளர், TWAD, திருவள்ளூர் அவர்களிடமிருந்து கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேற்படி கூடுதல் செலவினம் ( Price Escalation) தொடர்பாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று கடிதம் அனுப்பியமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறதுபார்வைக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் 511 /2021 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 187 நாள்: 28.02.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது.**

## பொருள் எண் 11

பொன்னேரி நகராட்சியில் 2022-2023 ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் விவரப்படியான சாலைப்பணிகள் மேற்கொள்ள 27.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| **1** | அன்பு தெரு (183006R086) சிமெண்ட் தளம் , அண்ணா தெரு, (183006R084), விவேகானந்தன் தெரு (183006R087), ஆகிய தெருக்களில் தார்தளம், பார்த்தசாரதி கோயில் தெரு (183015L023), அம்பேத்கார் தெரு (183015S104), எட்டியம்மன் கோயில் தெரு (183015S103) ஆகிய தெருக்களில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | **86.00** | ATS Infra Ponneri | மதிப்பீட்டை விட 7.29 % அதிகம் |
| | | | SHKP Construction Ponneri | மதிப்பீட்டை விட 0.06 %குறைவு |
| **2** | புளியந்தோப்பு ரோடு (183008L012) சிமெண்ட் தளம், ராமசாமி தெரு (183009R113) நாராயணி அப்பார்ட்மெண்ட் ரோடு (183017R130) ஆகிய தெருக்களில் தார்தளம், தண்டபானி பிள்ளையார் கோயில் தெரு (183014L019), பாலம்மாள் நகர் (183016S110), பாலம்மாள் நகர் 1வது தெரு (183016L026), பாலம்மாள் நகர் 2வது தெரு (183016S111), சாமூண்டீஸ்வரி நகர் 2வது குறுக்கு தெரு (183017S113),எம். பி. ஏ சர்ச் தெரு (183019S129), கட்டபொம்மன் தெரு (183020S132),புதுகச்சேரி முதல் குறுக்கு தெரு (183018L027), புதுகச்சேரி 2வது தெரு (183018L028) ஆகிய தெருக்களில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | **96.90** | எம். கார்த்திக், பொன்னேரி | மதிப்பீட்டை விட 4.62% அதிகம் |
| | | | ஸ்ரீதிருமுருகா கன்ஸ்ட்ரக்ஷன், பொன்னேரி | மதிப்பீட்டை விட 0.06% குறைவு |
| **3** | சிவன் கோயில் தெரு (183012R119) சிமெண்ட் தளம் , பாரதி மெயின் தெரு, (183026S218), பெருமாள் கோயில் தெரு (183027S226) ஆகிய தெருக்களில் | **76.90** | பி.ஜோதீஸ்வரன், பொன்னேரி | மதிப்பீட்டை விட 1.29%அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | தார்தளம், புதுகச்சேரி 1வது தெரு (183018S123),புதுகச்சேரி 3வது தெரு (183018L029),புதுகச்சேரி 4வது தெரு (183018L030), புதுகச்சேரி 5வது தெரு (183018L031),பர்மா நகர் அண்ணா நகர் (183021L042), கண்ணபிரான் தெரு (183025R223) ஆகிய தெருக்களில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | | ATS Infra Ponneri | மதிப்பீட்டை விட 0.01%குறைவு |
| 4 | R.S.ரோடு (183025R223) சிமெண்ட் தளம், சாம்பசிவன் நகர் -1(183026S221) தார்தளம் , எம். ஜி. ஆர். நகர், முதல் தெரு (183016R128), எம். ஜி. ஆர். நகர், முதல் தெரு முதல் குறுக்கு தெரு (183022L048), எம். ஜி. ஆர். நகர், 2வது தெரு (183022L049), வேண்பாக்கம் பள்ளம் (183022L050) ஆகிய தெருக்களில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 92.00 | எம். கார்த்திக், பொன்னேரி | மதிப்பீட்டை விட 4.78%அதிகம் |
| | | | ஸ்ரீதிருமுருகா கன்ஸ்ட்ரக்ஷன், பொன்னேரி | மதிப்பீட்டை விட 0.01%குறைவு |

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 691/2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 188 நாள்: 28.02.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

## பொருள் எண் 12

பொன்னேரி நகராட்சியில் 2022-2023 ம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம் 2.0-ன் கீழ் வார்டு எண். 7–ல் உள்ள கள்ளுக்கடைமேடு பகுதியில் Material Recovery Facility அமைக்கும் பணியினை மேற்கொள்ள 27.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 7–ல் உள்ள கள்ளுக்கடைமேடு பகுதியில் Material Recovery Facility அமைக்கும் பணியினை மேற்கொள்ளுதல் | 43.00 | A.T. சந்தானம் பொன்னேரி | மதிப்பீட்டை விட 4.77 % அதிகம் |
| | | | பி.ஜோதீஸ்வரன், பொன்னேரி | மதிப்பீட்டை விட 0.01 %குறைவு |

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் 694/2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 189 நாள்: 28.02.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது.**

## பொருள் எண் 13

பொன்னேரி நகராட்சியில் பேரூராட்சியாக இருந்த காலத்தில் சர்வே எண் 200/5Cல் 07.10.2021 அன்று திருமதி. S.மணிமேகலை என்பவருக்கு கட்டிட உரிமம் எண் 65/21-22 மூலம் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. அதற்கான கட்டணமாக ரூ.77190 தமிழ்நாடு கிராம வங்கி வரைவோலை எண் 021364 நாள் 06.10.2021 மூலமாக செலுத்தினார். மேற்படி வங்கி வரைவோலையினை இந்நகராட்சியின் பொதுநிதி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்கு எண் 13581ல் செலுத்தப்பட்டது. அத்தொகை 13.10.2021 அன்று மேற்படி நகராட்சி வங்கிக்கணக்கில் ஈடுசெய்யப்பட்டு அன்றைய தினமே காரணம் குறிப்பிடாமல் கழிக்கப்பட்டது. இந்நிகழ்வு 2021–22ம் ஆண்டின் தணிக்கையின்போது சுட்டிக்காட்டப்பட்டு தொகையினை வசூலிக்க அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் 03.12.2022 அன்று மேற்படி நபரிடமிருந்து தொகை ரூ.77190 /- வசூலிக்கப்பட்டது. ஆனால் மேற்படி தொகை 13.10.2021 அன்று இந்நகராட்சி வங்கிக்கணக்கில் கழிக்கப்பட்டு 27.10.2021 அன்று மீண்டும் அதே வங்கிக்கணக்கில் ஈடு செய்யப்பட்டுள்ளது. இதனை தணிக்கையின்போது தவறுதலாக பார்வையிடாததால் மேற்படி தொகையினை திரும்ப வழங்கக்கோரி தமிழ்நாடு கிராம வங்கியிலிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே இத்தொகையினை சம்பந்தப்பட்ட சம்பந்தப்பட்ட நபருக்கு திரும்ப வழங்கிட மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் 124/2023 /அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 190 நாள்: 28.02.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது.**

## பொருள் எண் 14

பொன்னேரி நகராட்சி பகுதிக்குட்பட்ட 22வது வார்டு சங்கர் மாருதி நகர் , சங்கர் மாருதி நகர் 2வது தெரு , 23வது வார்டு கரிகிருஷ்ண பெருமாள் நகர் மற்றும் 24 வது வார்டு அன்னை அவென்யூ 1வது தெரு ஆகிய இடங்களில் புதியதாக பைப்லைன் அமைக்கக்கோரி பொதுமக்கள் மற்றும் வார்டு உறுப்பினர்களிடமிருந்து புகார்கள் தொடர்ந்து வரப்பெற்றதை தொடர்ந்து மேற்படி பகுதிகளில் நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பைப்லைன் அமைக்கும் பணிகள்

மேற்கொண்டமைக்கும், 5வது வார்டு வேணுகோபால் முதல் தெரு மற்றும் 27 வது வார்டு பெருமாள் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் புதியதாக பைப்லைன் அமைக்கக்கோரி பொதுமக்கள் மற்றும் வார்டு உறுப்பினர்களிடமிருந்து புகார்கள் தொடர்ந்து வரப்பெற்றுள்ளதால் மேற்படி பைப்லைன் அமைக்கும் பணிகளுக்கும், தோராய செலவினம் ரூ. 4.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் 114/2023 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 191 நாள்: 28.02.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது**

## <u>பொருள் எண் 15</u>

பொன்னேரி நகராட்சி பகுதிக்குட்பட்ட 7வது வார்டு கள்ளுக்கடைமேடு குறுக்கு தெருவில் சாலையின் உயரம் மிகவும் தாழ்வாக உள்ளதால் பாதாள சாக்கடை பணிகளை மேற்கொள்ள இயலாது என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேற்படி சாலையில் ரப்பீஷ் கொட்டி சாலையின் உயரத்தை அதிகப்படுத்தும் பணியினை மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 2.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் 511/2021 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 192 நாள்: 28.02.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது**

## <u>பொருள் எண் 16</u>

பொன்னேரி நகராட்சி பகுதிக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் உள்ள சாலைகள் அமைத்து 10 ஆண்டுகளுக்கு மேலானதால் சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. இதனால் பொதுமக்கள் மிகவும் அவதியுறுகின்றனர். எனவே மேற்படி சாலைகளை சீரமைக்கக்கோரி பொதுமக்கள் மற்றும் வார்டு உறுப்பினர்களிடமிருந்து புகார்கள் தொடர்ந்து வருவதால் மேற்படி சாலைகளை சீரமைக்கும் பணியினைபொதுநிதியில் மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 37.50/- இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | சாலை விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 3 | எல்லையம்மன் கோயில் முதல் தெரு | பேவர் பிளாக் | 990000 |
| 2 | 5 | ஜோதிராமலிங்கம் சுவாமி நகர் 2வது தெரு | பேவர் பிளாக் | |
| 3 | 4 | சர்ச் முதல் தெரு | பேவர் பிளாக் | 870000 |
| 4 | 4 | சர்ச் 2வது தெரு | பேவர் பிளாக் | |
| 5 | 5 | ஜோதிராமலிங்க சுவாமி நகர் முதல் தெரு | பேவர் பிளாக் | 950000 |
| 6 | 2 | அரசூர் சாலை குறுக்கு தெரு | பேவர் பிளாக் | |
| 7 | 5 | ஜோதிராமலிங்க சுவாமி நகர் 5வது தெரு | பேவர் பிளாக் | 940000 |
| | | **மொத்தம்** | | **3750000** |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண்283 /2023 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 193 நாள்: 28.02.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது**

ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.